
# நபிகள் நாயக மான்மிய மஞ்சரி

சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர்

இலவச வெளியீடு

சதாவதானி
கா. ப. செய்குதம்பிப்
பாவலர்

# நபிகள் நாயக
# மான்மிய
# மஞ்சரி



முதற்பதிப்பு: 1976.

முகப்பு அமைப்பு: 'இக்பால்'

அச்சு அமைப்பு: 'அகரம்'

# வண்டுகளே வாருங்கள்!

கோட்டாற்றில் சுரந்த பாட்டாறு
இஸ்லாமிய இலக்கியப் பாத்தியில் பாய்ந்த காலம்
இஸ்லாமியருக்கு வருவாய்க் காலம்.

இந்த *'யாப்பினுள் அட்டிய நீர்'*ப் பாசனத்தால்
பூவனத்தில் ஒரு பொன்வசந்தம்.
தமிழ்க் குடலையில் மாநபியின் மகிமை மணக்கும் மலர்கள்.
*'நபிகள் நாயக மான்மிய மஞ்சரி'* கிடைத்த
பூக்காலம் பொற்காலம்தான்.

மான்மியம் என்றால் பெருமை. பாவலர்
இந்தப் பாடல்களால் பெருமானாரைப்
பெருமைப் படுத்துகிறாரா? இறைவனாலேயே
பெருமைப் படுத்தப் பட்டவரை மனித நாவா
மகிமைப் படுத்திவிடும்? *'கோடானு கோடி
மறையாலும் வருணிக்கமுடியாத கருணை வடிவை'*
எச்சில் தூரிகையா சித்தரித்துக் காட்டிவிடும்?
இல்லை; வானவராலும் மற்ற தூதராலும்
புகழப்பட்டவரைப் புகழ்வதால் — அந்தப்
புனிதப் புகழ் மணத்தால் — தம் நாவையும்
புண்ணியப் பூவாக இனம் காட்டப்
பாவலருக்கு எழுந்த ஆசையே இந்தப்
பாடல்களின் பிறப்புக்குக் காரணம்.

நீரில் நின்று நா செய்த தவமே வரமாகிவிடுகிறது.
நூறுபூக்களுக்கு மேல் மலர்கின்றன. உடல் உள்ளம்

அனைத்தாலும் நூறு அவதானம் செய்து பெற்ற
சதாவதானச் சாதனையை விட ஒரு நாவாலேயே
நூற்றுக்கும் அதிகமான அவதானங்களைச்
செய்து காட்டிய சாதனை
பாவலருக்குப் பெருமையல்லவா?

'*இருளெனும் குபிரின் குலமறுத்து அறநெறி விளக்க
மறுவிலாது எழுந்த*' மகாமதியின் கதிர்கள் தோய்ந்து
'*மகாமதி*' அமாவாசையற்றவராகிவிடுகிறார்.

கோவை பாடிய வாயால் இந்தப் பாவையும் பாடி
மாணிக்க வாசகராகிறார் செய்குதம்பிப் பாவலர்.

காய்ச்சீர்களால் நடக்கும் கலிப்பாடல்களின் கம்பீரம்;
யாப்பு நட்டுவாங்கத்திற்குத் தவறாமல்
அடிகளில் ஒலிக்கும் சந்தச் சலங்கையின் ஓசை;
இழுத்த இழுப்பிற்கு எதுகை மோனைகளை
ஏவல் கேட்கச் செய்யும் எஜமானத்தன்மை;
ஆராய்ந்து தேர்ந்த வார்த்தை மணிகளின்
அலங்கார அணிவகுப்பு; கனிந்த மொழிப்புலமையால்
கசியும் நயரசம்; அருட்தூதர் மீது
பொங்கியெழும் அன்புணர்வு வரையும்
அழகுக் கோலங்கள் — இவை எல்லாம்
இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கட்கிடையே
பாவலருக்குத் '*தங்க*' ஆசனம் தந்துவிடுகின்றன.

வள்ளல் நபியின் வாழ்வும் வாக்கும்
தமிழாக்கம் செய்யப்பட்டு விட்டன.
கன்னித் தமிழில் ஒரு கவிதை 'ஹதீது'!

பாடல் களில்தான் எத்தனை நயம்!
நகரப் படலங்களில் புலவர்கள் தங்கள்

காவியத் தலைவனின் நகரத்தைப்
பதக்கத்தில் மணி என்பார்கள்.
உமறுப் புலவரும் நாவலந்தீவு நானிலத்திற்குக் கண்;
அறபு நாடு கண்மணி; கண்மணிக்கு
உள்ளுறை உயிர் மக்கமாநகர் என்பார்.

பாவலரோ—
*'ஓங்கு மொளி தாங்கியுறு வித்து'* என
நயமாகப் பாடுகிறார் மக்கமாநகரத்தை.
எல்லாம் அங்கிருந்து தானே விளைந்தது!

*'சுத்தபர வெட்டவெளி தோன்றுபொருள் அத்தனைக்கும்
ஒத்த முதற் காரணமாய்'* அது இருந்த தன்மையையும்
எடுத்துக் காட்டுகிறார்.

புல்லர்கள் புனித நபிமீது *'புங்கமழை தூவிப்
போந்தடர்ந்த'* நேரத்தில் அன்பர்குழாம் அவரைச்
சுற்றி நின்று காக்கிறது. இதனை *'அங்க அரண்
கட்டி'* என அழகாகச் சொல்கிறார் பாவலர்.
இந்த அங்க அரண் அங்கவியல் கூறுத
ஐந்தாவது அரண்.

'உஹுத்' போர்க்களம். பகைவரின் தாக்குதலால்
பெருமானாரின் பற்கள் உடைந்து போய் விடுகின்றன.
சினங்கொண்ட தோழர்கள் பகைவர்களைச்
சபிக்க வேண்டுகிறார்கள்.
அகிலத்திற்கெல்லாம் அருட்கொடையாக
அனுப்பப்பட்டவரல்லவா அருமை நாயகம். அவர்களது
திருவாயிலிருந்து 'இறைவா! அவர்கள் தாங்கள்
செய்வது இன்னதென அறியாதிருக்கிறார்கள். அவர்களை
நேர்வழி செலுத்து' என்ற வேண்டுதல்தான் பிறக்கிறது.
பாவலர் பாடுகிறார்:

மல்லுடைய வெஞ்சமரில் வந்தெதிர்ந்த வஞ்சகர்தம்
கல்லுடைய கைக்கவணால் காய்ந்தெறிந்து வாய்ந்தமுகப்
பல்லுடையக் கோறல்செய்த பான்மைகண்டும் தீமையிலாச்
சொல்லுடைய நற்கருணை தோய்ந்துநின்ற தாய்ந்தேமோ
சுத்தநபி நாயகமே தோய்ந்துநின்ற தாய்ந்தேமோ!

'பல்லுப் போனால் சொல்லுப் போகும்' என்பதல்லவா
வழக்குமொழி! இங்கோ பல் போனாலும்
தீமையிலாச் சொல் வருகிறதாம்.
நயமான சொல்லாட்சி.

தாங்கள் வணங்கும் விக்ரகங்களை நிக்ரகம் செய்யும்
பெருமானாரின் பிரச்சார வேகம் கண்டு
கலக்கமும் கொதிப்பும் கொண்ட குறைஷியர்கள்
பெருமானாரைப் பேணிவந்த பெரிய தந்தையார்
அபூதாலிபிடம் சென்று முறையிடுகிறார்கள். அவர்
பெருமானாரிடம் சென்று தெரிவிக்கிறார். அப்பொழுது
நபிகள் நாதர் கூறிய புகழ்மிக்க சொற்களைப்
பாட்டாக்குகிறார் பாவலர்:

செங்கதிரும் வெண்மதியும் சேரஇரு கைத்தலத்தில்
தங்கவைத்துப் பைம்பொன்நிதி தந்திறைமை ஈந்தாலும்
துங்கமிகு சாந்திநலம் தோய்ந்தபரி சுத்தநெறி
எங்கணிலை என்றுரைத்த திப்புவியும் ஒப்பாதோ
ஏந்தல்நபி நாயகமே இப்புவியும் ஒப்பாதோ!

எங்கள் நிலை சாந்தி நலம் என்பதனால்
பலதெய்வச் சிலை வணக்கம் பூசல் விளைவிக்கும்
பொல்லா நெறி என்பதும்,
பரிசுத்த நெறி என்பதனால்
விக்ரக வணக்கம் ஆன்மாவையே அழுக்காக்கும்
இழுக்கு நெறி என்பதும்,
எங்கள் நிலை என்பதனால்
நாம் இதில் நிலைத்து நிற்பவர்கள், மாறமாட்டோம் என்பதும்

எவ்வளவு அருமையாகவும்
அழுத்தமாகவும் உணர்த்தப் படுகின்றன!
வாகைப்பூக்கள் குருதிப் பாசனத்தில் விளைபவை.
ஆனால் குருதிக் கறை படாத வெற்றியோடு
மக்கமாநகர் புகுகிறார் பெருமானார்.
என்ன தண்டனை கிடைக்குமோ என்று
நடுங்கிக்கொண்டிருந்த இன்னாசெய்த
பகைவர்களை மன்னிப்பு நன்னயம் செய்து
ஒறுக்கிறார் பெருமானார். வரலாறு வியக்கும்
இந்நிகழ்ச்சியைப் பாவலர் பாடுகிறார்:

மக்கநக ரார்செய்த வல்வினைகள் யாதெனினும்
ஒக்கமறந் தேன்சகித்தேன் ஒன்றுமில்லை துன்பமினி
மிக்கமறு வோடுசுகம் மேவஉயிர் வாழஎனத்
தக்கஉரை தந்துநின்ற சாதுரியம் ஒரேமோ!
சாதுநபி நாயகமே சாதுரியம் ஒரேமோ!

பகைவரை மன்னித்தது
வெறும் அறத்துப்பால் விஷயம் மட்டுமல்ல;
பகைவர்களை நண்பர்களாக்கிக் கொள்ளும்
பொருட்பால் விஷயமும் கூட என்பதைக்
காட்டும் சொல்லல்லவா 'சாதுரியம்' என்பது.
நடந்ததும் அதுதானே. என்னே பாவலரின்
சாதுரியச் சொல்லாட்சி!

பெருமானாரின் வாழ்க்கையைச் சரிவரக்
கல்லாதோர் சிலர் அவர் பலரைத் திருமணம்
புரிந்து கொண்டதைப் பற்றித்தம் அறியாமை வெளிப்பட
முகம் சுளிப்பது கண்டு
அவர்களுக்கு அறிவுறுத்துவதற்கென்றே
பாடுவார் பாவலர் :

உற்ற பெரும் போரினிடை ஊறுபட்டு மாண்டவர்தம்
கொற்றமிகு கைமைகளிற் கொண்டணைக்க நாதியின்றி
அற்றமிலா வெந்துயருள் ஆழ்ந்துலைந்த பல்லோரைக்
குற்றமறப் பத்தினியாக் கொண்டமையுங் கேட்டோமே
கொண்டல்நபி நாயகமே கொண்டமையுங் கேட்டோமே!

அறப்போரில் உயிர்துறந்த அன்பர்கட்கு நன்றி காட்ட,
போரில் கணவனை இழந்த பெண்களுக்கு அக்காலத்தில்
ஏற்பட்ட அவலநிலையிலிருந்து அவர்களைக் காக்க,
ஊருக்கு மட்டும் உபதேசம் செய்யாமல் தாமே இதிலும்
முன்மாதிரியாய் இருக்கத்தான் விதவைகளைப்
பெருமானார் மணந்து கௌரவம் தந்தார்.

அதுவும், ஐம்பத்து மூன்றுவயதுவரை தம்மினும் மூத்த
மனைவி ஒருவருடனேயே வாழ்ந்திருந்து, இளமையெலாம்
கழிந்த பருவத்தில் செய்து கொண்ட விதவைத்
திருமணங்கள் அந்த விதவைகளுக்குப் பாதுகாப்பும்
கௌரவமும் தரவேயன்றி வேறு எந்நோக்கத்திற்காகவும் அன்று.
'*குற்றம் அறப் பத்தினியாக் கொண்ட*'தைக்
குற்றம் என்பார் எனில் அது அவர்கள்
மதிக்குற்றம் தானே!

சிந்தையும் மொழியும் செல்லா இறையைச்
சொல்லால் சொல்ல வருகிறபோது மொழிகாரணமாகவே
சில குற்றங்கள் நேர்ந்து விடுவதுண்டு.
குமரகுருபரர் ஒரு முறை கூறினார் 'இறைவா!
உன்னை அவன் என்று அழைக்க முடியாது;
ஏனென்றால் நீ ஆணில்லை; அவள் என்று
அழைக்க முடியாது; ஏனென்றால் நீ பெண்ணில்லை;
நல்லவேளை தமிழில் 'அவர்' என்ற பொதுச்சொல்
ஒன்றிருப்பதால் நான் பிழைத்தேன்' என்று.
அதற்காக அவர் தமிழைப் பாராட்டுவார்.

பாவலரும் இறைவனைப் பற்றி உணர்த்த நினைக்கிறார்.
இதுவரை உலகம் எதை எதை இறைவன் என்று கருதி

வழிபட்டதோ அவையெல்லாம் படைப்புக்களே தவிர
இறை இல்லை என ஒதுக்கிக்கொண்டே வருகிறார்,
'நிஇதி' – 'நீ இதுவல்ல' - என்று கூறும்
சிறந்த தத்துவ நெறியில்.

'விண்ணுமில்லை மண்ணுமில்லை மேலுமில்லை கீழுமில்லை
பெண்ணுமில்லை ஆணுமில்லை பேடுமில்லை மூடுமில்லை
தண்ணுமில்லை சூடுமில்லை —'
வானுமில்லை நீருமில்லை வாயுமில்லை தேயுமில்லை
நானுமில்லை நீயுமில்லை நாளுமில்லை கோளுமில்லை
பானுமில்லை மீனுமில்லை—,
என்று அடுக்கிக் கொண்டே வருகிறார்.

இப்படி எது எது இறை என்று கருதப்படுகிறதோ
அதையெல்லாம் இல்லையென்று மறுக்கின்ற
நாஸ்திகன்தான் உண்மையான ஆஸ்திகன்.
பிறகு எதுதான் இறைவன்? [எதுதான்?
யார்தான்? மொழிச்சிக்கல் வந்துவிட்டதல்லவா;
இறை'வன்' - மறுபடியும் மொழிச்சிக்கல்]
ஏகன் என்றால் கூட ஆண் என்றாகிவிடும்.
ஆணுமில்லை என்று சொல்லிவிட்டு ஏகன்
என்றால் தவறல்லவா? எனவே மிக மிக
அற்புதமாக ஏகம் என்கிறார் பாவலர்
*'ஏகம் என்ற கத்த நிலை நத்தேமோ'*

'மான்மிய மஞ்சரி' என்று பெயர் வைத்தாலும்
சமய நாயகர்களின் மான்மியங்களில்
வழக்கமாகக் கூறப்படும் அதியற்புதங்களைப்
பாடாமல் அறிவியல் பார்வையில், உலகியல் நெறியில்
நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுத்துப் பாடுவது
பாவலரின் பாராட்டத்தக்க பண்பு. இத்தகைய
நிகழ்ச்சிகள் தாமே பெருமானாரின் அற்புதங்கள்.

'உண்டியின்றிப் பட்டினியால் உற்றலைவோர் மாதுயரம்,
பண்டிவிம்ம வாரியுண்ணும் வன்கணர்'
அண்டியறியவே நோன்பு என்றும்
எல்லோரும் சமவுடைமை எய்தவே ஸக்காத் என்றும்
இப்பார்வையிலேயே காட்டுவார் பாவலர்.
அதுவும் ஸக்காத் பற்றிப் பாடுகையில்:

**இன்மை உண்மை செல்நிலைக்கு எய்தாமல் எல்லோரும்
நன்மைபெறு ஓர் சமமாம் ஞாயமிகு ஏழைவரி
வன்மையுடன் ஈந்துரிமை வாய்ந்தபொரு ளாதாரத்
தன்மைகொளச் செய்தவுங்கள் தத்துவமும் நத்தேமோ
சாந்திநபி நாயகமே தத்துவமும் நத்தேமோ!**

என்னும் வார்த்தை ஒவ்வொன்றும் 'அட்சர லட்சம்'
என்பார்களே அந்த மரியாதைக் குரியது.
இன்மை உண்மை என்பது மனிதர்களுக்கு ஏற்படுவதில்லை.
செல்வநிலைக்குத்தான் என்கிறார். எல்லோரும்
நன்மைபெற வேண்டுமென்றால் ஓர்சமமாவதுதான்
வழி என்கிறார்.

இப்படி ஓர்சமமாவதுதான்
ஞாயம் என்பதனால் ஏற்றத் தாழ்வுகள் அநியாயம் என்கிறார்.
இந்த ஏற்றத்தாழ்வுகளை நீக்கத்
தன் திறமை உழைப்பால் தேடிவைத்திருப்பவனின்
பொருள் முழுவதையும் பறிப்பதோ, அதுவும்
வன்முறையால் வெளவுவதோ ஞாயமாகாது
என்பது தோன்ற ஸக்காத்தை ஞாயமிகு ஏழைவரி என்கிறார்.
'ஞாயமிகு' என்ற சொற்றொடர்
ஒருபுறம் '*ஓர் சமமாம் ஞாயத்தை மிகுவிக்கின்ற ஏழைவரி*'
என்றும் இன்னொருபுறம்
'*ஓர்சமமாக்கும் ஞாயமிக்க ஏழைவரி*' என்றும்
பொருள்பட்டு நிற்கும் நயத்தை
வியக்காமல் இருக்க முடியவில்லை.

நேர்வழியில் பொருள்தேட உரிமை;
செல்வனின் செல்வத்தில் ஏழைக்கும் உரிமை;
இதுவல்லவா உரிமைப் பொருளாதாரம்!
மற்றதெலாம் அடிமைப் பொருளாதாரம்தான்.
இத்தத்துவத்தை வெறும் தத்துவமாகப்
பிரச்சாரம் மட்டுமா செய்து கொண்டிருந்தார்?
நடைமுறையில் செயல்படுத்தியுமல்லவா காட்டிவிட்டார்!
அதுவும் சர்வாதிகாரத்தாலா?–இல்லை!
அன்பர்கள் அவர்களாகவே ஏற்றுக்கொண்ட
செய்கையினால் பொருளாதாரத் தன்மை
'கொளச் செய்த' தத்துவமல்லவா அது!
இந்த வெற்றிகரமான, நியாயமான, இயற்கையான
தத்துவத்தை நத்தாமல் வேறு வேறு
தத்துவங்களை அல்லவா நத்திக் கொண்டிருக்கிறோம் என்கிறார்.
இந்தமாபெரும் பொருளாதாரப் புரட்சியை
வன்முறையில் அல்ல அன்பெனும்
நன்முறையில் செய்து காட்டினார்; எனவே
'*சாந்தி நபி நாயகமே*' என்கிறார்.
அருமையான பாடல்.

பெருமானாரை எதிர்ப்படுகின்ற போதெல்லாம்
அக்கம் என்ற அக்கிரமக்காரன் முகத்தை
வக்கிரமாக வலித்துக் காட்டியதாகவும்
பெருமானார் அவனுக்கு இந்நோய் பெருகும்படிச்
சபித்ததாகவும் சீறாப்புராணம் கூறுகிறது.
பாவலரோ இப்படி வலித்துக் காட்டிக் காட்டி
அதுவே அவனுக்கு இயல்பாகிவிட அதைக் கண்டுகூடப்
பெருமானார் உட்கசிந்ததாகப் பாடுவார்.

கண்டவுடன் பல்லிளித்துக் கைவிரித்துக் கண்சிமிட்டிக்
கொண்டபரி காசமுறை கூர்ந்தியற்றும் கோளினர்க்கும்
மண்டலத்தில் அச்செயலே மாற்றமறை எப்பொழுதும்
அண்டஅறிந்து உட்கசிந்த அற்புதமும் நட்பேயோ
அண்ணல்நபி நாயகமே அற்புதமும் நட்பேயோ!

சாபம் பலித்து அவன்நோய் பெருகியதைவிட
வலிப்பு இயல்பானதுகண்டு அப்புல்லனுக்காகவும்
உட்கசிந்த இரக்கமல்லவா 'அற்புதம்' என்கிறுர் பாவலர்.
கருணை நபிக்கேற்ற காரியமும் அதுதானே! பாவலரின்
பார்வையைப் பாராட்டாமலிருக்க முடியுமா?

ஒவ்வொரு பாடல் முடிவிலும் பயின்று வருகிற
ஓகாரத்தில் அல்லது ஏகாரத்தில் பாவலரது
உருக்கம், அன்பினுல் ஈரமான உள்ளம்
இவை தொனிக்கின்றன.

பாடல்களில் உள்ள நிகழ்ச்சிகள்
வரலாற்று வரிசையில் இல்லை; முன்பின்னுகக் கிடக்கின்றன.
அதுமட்டுமல்ல; சில பாடல்களை
முன்னரே அந்நிகழ்ச்சிகளை அறிந்தோர் தவிரப்
பிறர் புரிந்து கொள்வது அரிது.
பெருமானுரின் வாழ்வையும் வாக்கையும்
பிறருக்கு விளக்குவதற்காகப் பாவலர் இந்நூலைப்
பாடவில்லை என்பதுதான் இதன் காரணம்.
பெருமானுரின் வாழ்விலும் வாக்கிலும் ஒன்றிப்போய்
ஈடுபட்டிருந்த பாவலரின் மனம் எதை நினைந்து
உருகுகிறதோ அதனை

நினைவுவந்த வரிசையில் உணர்வு பூர்வமாகப் பாடியுள்ளார்.

இதுதான் உண்மையான கவிதை சுரக்கும் முறை.

இம்மஞ்சரியின் மலர்கள் காகிதப்பூக்களல்ல;

உணர்ச்சிக் காம்பிலே பூத்த உண்மைப் பூக்கள்.

ஆகையினால் இவைகளுக்கு வாடுதலும் இல்லை.

அப்துல்ரகுமான்
தமிழ்ப் பேராசிரியர்

இஸ்லாமியக்கல்லூரி,
வாணியம்பாடி-2
20—3—1976

கலனெடுத்துக் கடனடத்திக்
கனநிதியந் தேடுநருங்
கதிக்கச் செம்பொற்
குலனெடுத்துக் குணனெடுத்த
குறியினருங் கோன்மைபெறு
கொற்றோர் தாமும்
பலனெடுத்த பெருந்தவத்தின்
பணியெடுத்துப் பதமடைந்த
பான்மை யோரும்
வலனெடுத்த அரியகவி
வளனெடுத்து மதித்திடுபக
வல்லோன் யானே!

சதாவதானி



கா.ப.செய்குதம்பிப்பாவலர்

கியாமத்துப்
பாலாம்
நபிகள்
நாயகத்தின்
அமுத்துப்பால்
புகட்டும்
மான்மிய
மஞ்சரிக்குப்
பொருட்பால்
அருளிய
செவிலி:



ஜனாப். கே. சி. முகம்மது இசுமாயில்
உத்தமபாளையம், மதுரைமாவட்டம்.

# ஒரு சோலை பொதுவுடைமை ஆகிறது!

இருள் நரைத்த பாலைவனம்.
அதில்—
ஏர்க்கால்களையே ஆரக்கால்களாய்ப்பெற்ற
ஒரு சந்திரச் சக்கரம்.
அது நடந்தவழி யெல்லாம்
அறிவின் நடவு.
ஆம்—பெருமானார் உதயமானார்.

அவர்—
வேரும் பயன்படும் மருந்து மரம்.

அந்த மருந்து மரத்தின்
இனிய விதைக்குக்
கருப்பை தந்தவர்;
தனது வாய்க்கால் நடையால்
அதன் பூப்புக்குத்
தமிழ்த் தோட்டத்தில்
தன்னையே பாய்ச்சியவர்;

தானம் வாங்கிய பாவலரல்லர்;
தானம் செய்தவர்
—அவதானம் செய்தவர்—
சதாவதானி
செய்கு தம்பிப் பெரும்பாவலர்.

பாவலரின் பாக்குடலை
விளக்கம் செய்தவை
அவர் பெற்ற அசை மலர்களே;
தசை மலர்களல்ல.

பர்தாவிற்குள் முடக்க
அவர் பூக்கள்
பெண்பால் அல்ல.

மணமே மகரந்தமாகும்
மனோகர மலர்கள் அவை.

○ ○

எழுத்துக்களின் மேல்
நீச்சலடிக்க மட்டுமே அறிந்திருந்த
என்னைப் போன்றோர்
முக்குளிக்கவும் மூழ்கி முத்தெடுக்கவும்
பயிற்சி பெற்றது
பாவலரின் பாக்கடலில்தான்.

பாவலரின் மான்மியத்தை
நான்கு சுவர்களுக்குள்
புதைத்து வைத்துக்கொண்டு
புதையல் புதையல் என்று
காத்துக்கிடக்கும் பூதங்களிடமிருந்து
அந்நூல்

—திக்குகளை எல்லாம் முட்டி மோதி
எதிரொலியால் வானைத்திறக்கும்
வல்லமை பெற்ற அந்நூல்—

விடுபட்டுத்
தமிழ்ப் பொதுவில் உலாவரும்
கம்பீரமான காட்சியைக் காணும்
பெருவிருப்பினுல் நான்,

—பாவலர் பிறந்த திருக் கோட்டாற்றிலேயே
அவன் வாழ்ந்திருந்த காலத்திலேயே
பிறந்து அழும் பேறு பெற்ற நான்—

வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம்
அச்சேருமல் கிடக்கும் அவரது
நூல்கள் பற்றிக் குமுறி
வெடித்து விடுவதுண்டு.

இளையான்குடிக் கல்லூரி
அண்மையில் வெளியிட்ட
சீரு ஆய்வுத்திரட்டில் இடம்பெற்ற
எனது கட்டுரை ஒன்றிலும்
பாவலரின் மான்மியப்பாடல்
ஒன்றைத் தொட்டுக்காட்டி
'அந்தநூல் அச்சேறி நூல்வடிவு பெருதது
நல்ல தமிழின் பொல்லாத ஊழன்றி
வேறென்ன? என்று குறிப்பிட்டிருந்தேன்.

பலகண்கள் மேய்ந்து ஓய்ந்த
இந்தவரிகளுக்கிடையே
அல்ல, அல்ல
இந்த வரிகளின் எழுத்துக்களுக்கு ஊடே
படிக்கின்ற வல்லமையை
ஒருவர் மட்டுமே பெற்றிருந்தார்.

வரதட்சணை கொடுக்க முடியாமல்
இளமையைப் பலிகொடுத்துக் கொண்டிருந்த
பெண்ணைப் போன்ற இந்தநூலை
மணம் பெறச்செய்யவும் வாழ்வு பெறச்
செய்யவும் வேண்டுமென்று
ஒருவருடைய மனச்சாட்சிக்குத்தான்
சூடு பிறந்தது.

அவர்-
உத்தமபாளையம் என்ற தனது ஊரின் பெயரைக்
காரணப் பெயராக்கிக் கொண்டிருக்கும்
ஜனுப் கே.சி.முகமது இசுமாயில்
என்னும் நாடறிந்த பெருமகனர்.
'மான்மியத்தை அச்சிட்டு
இலவசமாக வினியோகிக்க விரும்புகிறேன்.
அச்சிடும் பொறுப்பை ஏற்றுக்கொள்வாயா?'
என்று எடுத்த எடுப்பிலேயே எனக் கெழுதி
என்னைத் திக்கு முக்காடச் செய்தது
ஒரு செய்தியல்ல
இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாறு.

பாவலரின்
பாட்டு மழைத்துளிகள்
தங்கள் பொக்கிஷாலயங்களில்
சிக்கிக் கொண்டகாரணத்தாலேயே
தங்களை
முத்துச்சிப்பிகள் என்று
பிரகடனப் படுத்திக்கொண்டு கிடக்கும்
வயிறுமட்டுமே உடம்பாய்க்கொண்ட
கிளிஞ்சல்கள் நடுவில்
ஜனாப் கே.சி.எம். ஒரு சாதகப்புள்.

அந்தத் துளிகளுக்காவே-
அவற்றை மகிமைப்படுத்தவே-
தனது சிறகுகளைப்
பிரார்த்தனைக் கரங்களாக
விரித்துக் காத்திருக்கும் சாதகப்புள்

○ ○

நிலமிருந்தும் உரமிருந்தும்
பருவம் துணையிருந்தும்
விதைகளுக்கு ஏற்பட்ட
செயற்கையான பஞ்சம் காரணமாக
மலட்டுச் சாயல் பெற்றுவிட்ட
இஸ்லாமியத் தமிழிலக்கியப்பண்ணையில்
நெருக்கடி நிலை!
பதுக்கப்பட்டு விட்ட
விதைகளைத் தேடிப்பிடித்துச்
சொல்லேருழவருக்கு
இலவசமாய்ப் பகிர்ந்தளிப்பதே
தமது தற்போதைய
ஓரேஅம்சத் திட்டம் என்று
சூளுரைத்துப் புறப்பட்டு விட்ட
ஜனாப் கே.சி.எம்.அவர்கள்
மதுரை மாவட்டம் தந்த சீதக்காதி

○ ○

உரைகற்கள் என்று நம்பி
பாவலரின் மான்மியப் பொன்னை
இவ்வளவு காலமும்
கூழாங்கற்களில் உரைத்துப்
பொழுதை வீணடித்தோம்.
தற்செயலாகக்
கைவல்ல தட்டார்கை உரைகல்லில்
ஒரு வீச்சுப்பட்டது;
இதோ
ஆபரணத்தை நீங்கள்
அணிந்து மகிழ்கிறீர்கள்

○ ○

தகுதிவாய்ந்த செவிகளுக்காகவும்
விழிகளுக்காகவும்
எனது வாயும் கையும்
முறையிட்டு முறையிட்டு
ஓய்ந்து போய்க் கொண்டிருந்த போது
திடீரென்று
உத்தமபாளையத்திலிருந்து
திறந்து நீண்ட ஓர் அமுதசுரபி
அன்னப் பருக்கைகளை யல்ல
அச்சுப் பருக்கைகளை வழங்குகிறது.
இலக்கியக் காயசண்டிகைகள்
ஏப்பம் விடுகிறார்கள்;
எங்கள் கிருபைச் சமுதாயத்தின்
பெருந்தன உதயகுமரர்களோ
முக்காடு போட்டுக் கொள்கிறார்கள்.

○ ○

புலவரெனப் பெயர்சொல்லி
வெறும்
தானியம்பாடி களாகவும்
மானியம்பாடிகளாகவும்
வாழ்ந்தவர் நடுவே நாயக
மான்மியம் பாடிய பாவலனை
வாணியம் பாடிக் கவிஞன்-

—பாவலனுக்குப் பிறகு
இஸ்லாமிய சமுதாயம்
தமிழுலகிற்குத் தலை நிமிர்ந்தளித்த
தகுதிவாய்ந்த கவிஞன்;
பாரதி, பாரதிதாசனுக்குப் பிறகு
தனக்குப் பின்னே
ஓர் இலக்கிய அணிவகுப்பை
உருவாக்கிய
வரலாறு பெற்ற கவிஞன்-

அவன் உணர்வுகளோடு அத்துவிதமாகி
உரித்துப் பரிமாறியுள்ளது,
நாவல் பழச்சாறு
நல்லதோர் எழுதுமை ஆனதுபோலப்
பார்த்தாலே இனிக்கவல்லது.

○ ○

இந்நூலுள் இடம் பெற்றுள்ள ஒருநூற்றிரண்டு
ஓரோவடி மிக்குவந்த வெண்டாழிசைக்
கொச்சகக் கலிப்பாக்களுள் தொன்னூற்றாறு பாடல்கள்
சென்னையிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த
'முஸ்லிம்' நாளேட்டின் வெள்ளி மலர்களில்
சுமார் 36 ஆண்டுகட்குமுன்னர் தொடர்ந்து
பிரசுரமாயுள்ளன.
இதுதவிர செய்குதம்பிப் பாவலர் அவர்கள்
கையொப்பமிட்டு ஜனுப் கே.சி.எம். அவர்கள்
மாமனுர் 'ஜனுப் என்.கே.எஸ்.முகமதுராவுத்தர்
கண்ணிய சமுகத்திற்கு' 26.7.1940 -அன்று
எழுதிய கடிதத்துடன் இணைத்தனுப்பியிருந்த
பாடல்களையும், தமிழ்நாட்டில் ஆங்காங்குப்
படியெடுத்து வைக்கப்பட்டுள்ள கையெழுத்துப்
பிரதிகளையும் ஒத்தும் உறழ்ந்தும் நோக்கிப் பாடல்களைப்
பதிப்பித்துள்ளோம்.

படிப்போர்க்குப் பொருள்மயக்கம்
ஏற்படாதிருப்பதற்காகச் சிற்சில
இடங்களில் சீர்பிரித்துப்
பதிப்பித்துள்ளோம்.
பாடல் முதற்குறிப்பு அகரவரிசையும்
அரபுச் சொற்கள் சிலவற்றுக்குப்
பொருள் விளக்கப்பட்டியலும்
பாவலர் வாழ்க்கைக்குறிப்பும்
நூலின் இறுதியில் இணைத்துள்ளோம்.

ஜனுப் கே.சி.எம். அவர்கள்பாவலரின் உள்ளத்தில்
நிலையான ஓர் உயரிய இடம்பெற்றவர். இதனை
செய்குதம்பிப் பாவலர் அவர்களே கையொப்பமிட்டு
15.4.1945-ல் 'கம்பம் பீர்முகமதுப் பாவலர்
அவர்கள் உயரிய சமூகத்துக்கு' எழுதிய கடிதம்
தெளிவாக்குகிறது. '......தங்கள் மாணவர்
ஆலிஜனுப்முகமது இசுமாயில் ராவுத்தர் அவர்கள்மீது
அகப்பொருள் ஐந்திணைக்கோவையொன்றெழுதத்
தீர்மானித்து அதிற்சில பாக்களைத் தங்கள்
பார்வைக்கு அனுப்பியுள்ளேன்.........
அந்நூலை ஏற்றருளத் தங்கள் மாணவரைத் தூண்டு
வீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.இக்கோவை
வரன்முறையாக எழுதப்படுகிறது'. என்று பேசும்
கடிதத்தையும் அத்தோடு இணைத்தனுப்பப்பட்ட
'உத்தமபாளையம் முகமதுஇஸ்மாயில் கோவை'யின்
சில செய்யுட்களையும் கவனிக்கின்ற போது ஜனுப்
கே.சி.எம். அவர்கள் பாவலரின் நன்மதிப்பினைப்
பெற்றிருக்கிறுர் என்பது தெளிவாகிறது.
இப்படிப் பாவலர் அவர்களோடு இறுக்கமான
இலக்கியத்தொடர்பு கொண்டிருந்த கே.சி.எம் அவர்கள்
இந்நூல் வெளியீட்டோடு தன்னை இணைத்துக்
கொண்டமைக்கோ,

பாவலர் அவர்களின் இலக்கியவாரிசாக விளங்கும்
'கவிக்கோ' ஜனுப். அப்துல்ரகுமான் அவர்கள்

இந்நூலுக்கொரு அருமையான முன்னுரை
எழுதியளித்தமைக்கோ நன்றிதெரிவிப்பது,
விழிகளைப் பாதுகாக்கும் காரணத்துக்காக
இமைகளுக்கு நன்றி தெரிவிப்பது போன்றதாகும்

இந்நூல் வெளியீட்டு முயற்சியில் அவ்வப்போது
எனக்கேற்பட்ட சிக்கல்களையும் தொல்லைகளையும்
மகிழ்ச்சிகரமாக என்னோடு பகிர்ந்துகொண்டு
அவற்றைக் களையும் வழிவகைகாணப் பேருதவியா
யிருந்த அருமைத் தம்பி
சின்னமனூர் தி.மு.அப்துல்காதர் எம்.ஏ.,
அழகிய முகப்போவியம் ஒன்றினை ஆர்வமோடு எ
தந்துதவிய இனிய நண்பர் திரு.நை.மு. இக்பால் எ
இந்தக் கொச்சகப் பாடல்களை அச்சகப் பாடல்கள
மிகக்குறுகிய காலத்தில் சிறப்பாக
நூல்வடிவு பெறச்செய்த
சிவகங்கை அகரம் அச்சகத்தார் ஆகியோர்க்குக்
கடப்பாடுடையேன்.
இருளில் விடப்பட்டுள்ள இத்தகு
நல்லிலக்கியச் செல்வங்கள்
வெளிச்சப்படுத்தப்பட்டுத்
தமிழின் பெருமைக்குப் பெருமை சேர்க்கக்
"கூராதோ வான்கருணை; கூர்ந்து வந்து வாய்மைந
தாராதோ எம்மிறையோன் சார்பு"

363, புதுநகர்,
வாணியம்பாடி-2
24.3.1976.

நாஞ்சில் ஆ. ஆரி

# நபிகள் நாயக மான்மிய மஞ்சரி

## காப்பு

வையமெலாம் வாழ்த்தெடுப்ப வந்தநபி நாயகத்தின்
துய்யசெழு மான்மியத்தைச் சொல்லுதற்கே—ஐயமறக்
கூடாதோ வான்கருணை கூர்ந்துவந்து வாய்மைநலந்
தாராதோ எம்மிறையோன் சார்பு!

## 1

சுத்தபர வெட்டவெளி
தோன்றுபொரு ளத்தனைக்கும்
ஒத்தமுதற் காரணமாய்
ஓங்குமொளி தாங்கியுறு
வித்தரிய மக்கநகர்
வீற்றிருந்து மாற்றமற
இத்தரையில் பெற்றபுகழ்
ஏத்தற் கெளிதேயோ
இன்பநபி நாயகமே
ஏத்தற் கெளிதேயோ!

## 2

ஒன்றுதெய்வம் ஒன்றுமதம்
ஒன்றுமக்கள் சாதியென
நன்றுபெறக் கூறி அவை
நாட்டிநவில் நான்மறையும்
குன்றுபெறு தீபமெனக்
கோத்தளித்துக் காத்தவுங்கள்
துன்றுமுயர் மாபெருமை
சொல்லற் கெளிதேயோ
சோதிநபி நாயகமே
சொல்லற் கெளிதேயோ!

## 3

'ஆதி ஒரு வன்தொழுகை
ஐவேளை நோன்புடைமை
போதியநல் ஏழைவரி
புக்க மக்க ஹஜ்ஜைந்தும்
நீதிதரு சன்மார்க்க
நீர்மைய' என் றேதிமுதன்
மாதிரியா முன்னின்ற
வள்ளன்மை உள்ளேமோ
மன்னர்நபி நாயகமே
வள்ளன்மை உள்ளேமோ!

## 4

'செங்கதிரும் வெண்மதியும்
சேரஇரு கைத்தலத்தில்
தங்கவைத்துப் பைம்பொன்நிதி
தந்திறைமை ஈந்தாலும்
துங்கமிகு சாந்திநலம்
தோய்ந்தபரி சுத்தநெறி
எங்கள்நிலை' என்றுரைத்த
திப்புவியு மொப்பாதோ
ஏந்தல்நபி நாயகமே
இப்புவியு மொப்பாதோ!

## 5

பள்ளியிடைப் போந்ததில்லை
பாரகலை கற்றதில்லை
தெள்ளியவிஞ் ஞானவியல்
சேர்ந்திருந்து தேர்ந்ததில்லை
ஒள்ளியமெய்ப் போதநலம்
உற்றதத்து வத்தொகுதி
அள்ளியநல் லாய்வுடைமைக்
காரே வியவாதார்
அநாதிநபி நாயகமே
ஆரே வியவாதார்!

## 6

வாய்ந்தமனை சுத்திசெய்தல்
மாடாடு பால்கறத்தல்
ஓய்ந்தகந்தை தோய்த்தல்தைத்தல்
ஊராருக் கேவல்செய்தல்
தேய்ந்தசெருப் பொக்கிடுதல்
தீமூட்டல் அட்டல்வெட்டல்
ஏய்ந்ததொழி லாதிபண்ணும்
இச்சைநிலை நச்சேமோ
இன்பநபி நாயகமே
இச்சைநிலை நச்சேமோ!

## 7

செல்லும் வழியனைத்துஞ்
சேர்ந்தெழுந்து கூண்டுநின்று
கொல்லுங் கெடுமதியிற்
கூர்த்தவிட முட்பரப்பி
அல்லும் பகலுமிக
அல்லல்செயு மந்தகர்க்கும்
ஒல்லும் நலனளித்த
உண்மைநிலை பொய்யேயோ
உலகநபி நாயகமே
உண்மைநிலை பொய்யேயோ!

## 8

நீசனபு ஜாகிலென்பான்
நிட்டூர நிந்தைசொலி
ஏசவந்த அப்பதத்தும்
இன்னல்மிகும் அன்னவன்தன்
மோசநிலைக் குள்ளஞ்சி
முற்றுலைந்த தன்றிஎதிர்
பேசமுகம் நோக்கஒண்ணுப்
பீடுநிலை நாடேமோ
பெருமைநபி நாயகமே
பீடுநிலை நாடேமோ!

## 9

மண்ணுண்ட பூழ்தியெலாம்
வாரியெழு மாமழைபோல்
தண்ணுண்ட மேனிமிசைத்
தந்தொறுத்து நொந்துபடப்
புண்ணுண்ட நிந்தைமொழிப்
பூசல்செய்த புல்லனையும்
எண்ணுண்ட ஈசனுரைக்
கிட்டிவிட்ட தென்னேயோ
ஏந்தல்நபி நாயகமே
ஈட்டிவிட்ட தென்னேயோ!

## 10

அழுகுமலச் சாணமெடுத்
தம்மம்மா அற்பகலும்
ஒழுகளறிந் தங்கமெலாம்
ஊறுசெய்த மாறினரும்
'எழுகநலஞ் சாந்திநிலைக்
கின்பசுக வாரிதிக்குள்
முழுக' என வேண்டிநின்ற
மோகநிலை காணேமோ
முழ்மைநபி நாயகமே
மோகநிலை காணேமோ!

## 11

கல்லால் எறிந்திருகால்
காயமுறக் கண்டகொடும்
பொல்லாப் புலையருக்கும்
புத்திவரக் கையேந்தி
அல்லா திருச்சமுகத்
தானதுஆக் கேட்டுவந்த
நல்லார் உமைப்போலும்
நானிலத்தி லுண்டேயோ
நாதநபி நாயகமே
நானிலத்தி லுண்டேயோ!

## 12

வாய்ந்ததிரு கஃபாவில்
வல்லவனை உன்னிமனம்
ஒய்ந்ததொழு கைச்சமயத்
தொட்டகத்தின் ஊன்குடல்தோல்
ஏய்ந்ததசை கொண்டெறிந்த
ஈனனுக்கு மின்னருட்சீர்
ஆய்ந்தளித்துக் காத்தவுங்கள்
அன்புடைமை நன்றேயோ
ஆலநபி நாயகமே
அன்புடைமை நன்றேயோ!

## 13

சித்தமுற நும்தலையில்
சேர்ந்தகுப்பை அத்தனையும்
நித்தநித்தம் போட்டுவந்த
நீசனையு மோரிருநாள்
அத்தலத்தில் காணுமல்
ஆய்ந்தவன்நோய்க் கங்கடுத்து
மெத்தமெத்த உள்ளுடைந்த
மேன்மைநலம் பேணேமோ
வேதநபி நாயகமே
மேன்மைநலம் பேணேமோ!

## 14

உற்றபெரு நண்பரிடை
ஓகைசெய்பற் கொம்பிரண்டில்
'குற்றமுற்ற தென்றனக்குக்
கொள்கமற்ற' தென்றுரைக்கச்
சொற்றஉரைக் குட்டுணுக்கிச்
சோர' நண்புக் கன்புசெயல்
நற்றவ' மென் றோதிநின்ற
ஞாயநிலை ஆயேமோ
நாடுநபி நாயகமே
ஞாயநிலை ஆயேமோ!

## 15

வஞ்சமற்ற நெஞ்சமொடு
வல்லவனைக் கஃபாவில்
தஞ்சமென நின்றிறைஞ்சித்
தாழ்பொழுதில் உம்கழுத்தில்
மிஞ்சுதுகி லிட்டிறுக்கி
வேதனைசெய் வீணனையும்
'அஞ்சலெ' னக் காத்தளித்த
அன்புடைமை என்னேயோ
ஆதிநபி நாயகமே
அன்புடைமை என்னேயோ!

## 16

வாய்ந்த சிவிகைமிசை
வந்திறங்கும் போழ்துமக(வு)
ஏய்ந்த கருச்சிதைய
ஈட்டிகொண்டு குத்திஉயிர்
மாய்ந்த மலை(வு)அருத்தும்
மாமடைய னுக்கும்இதம்
தோய்ந்த அருள்சுரந்த
சுத்தநிலை சற்றேயோ
சுகிர்தநபி நாயகமே
சுத்தநிலை சற்றேயோ!

## 17

உண்ணஉண வீந்துறங்கற்
குற்றஇடம் நல்கஅதை
நண்ணுமலக் காடாக்கி
நள்ளிருளில் போந்தொளித்தோன்
கண்ணுமருள் காட்டிஇரு
கைம்மலரால் வாய்ந்தசுத்தம்
பண்ணுமும தோகைநிலை
பன்னற் கெளிதேயோ
பாரநபி நாயகமே
பன்னற் கெளிதேயோ!

## 18

'மிக்கபொரு ளீவலினி
வெய்யபழி தீர்க்க' எனப்
பக்கமுறு சொற்கிணங்கிப்
பாரவடி வாளெடுத்துப்
புக்கசெயல் எங்கணுமுற்
போதரஅன் றுற்கிரங்கி
அக்கணமே காத்தளித்த
அம்புவியும் ஓராதோ
அண்ணல்நபி நாயகமே
அம்புவியும் ஓராதோ!

## 19

காட்டுமரச் சூழலிடைக்
கண்துயிலக் கண்டொருவன்
வீட்டும்உடை வாள்கொண்டு
வெட்டமுனைந் 'துன்னை இனி
மீட்டும்இறை யாவ'னென
விள்ள 'அல்லாஹ்' என்னஅஞ்சிப்
போட்டபடை கொண்டுதவும்
புத்திநலம் பேணேமோ
போதநபி நாயகமே
புத்திநலம் பேணேமோ!

## 20

குற்ற மனத்தொருத்தி
கூர்ந்தியற்றும் வல்வினைக்காய்
உற்ற சிபாரிசுகொண்
டோடிவந்த நட்பினிடைப்
'பெற்ற மகவெனினும்
பேதமுறு நீதிமுறை
பற்றல் இழுக்கெ'னமுன்
பன்னியதும் உன்னேமோ
பரமநபி நாயகமே
பன்னியதும் உன்னேமோ!

## 21

கொண்டபெரு நள்ளிருளில்
கூண்டெழுந்து கோறவெனக்
கண்டபுற வாயிலிடைக்
காத்திருந்த காதகர்தம்
'பண்டமெடுத் தவ்வவர்கள்
பாலளிக்க' என்றுரைத்து
மண்டடலி னோடகன்ற
வாகைநிலை தேரேமோ
வண்மைநபி நாயகமே
வாகைநிலை தேரேமோ!

## 22

மக்கநகர் விட்டெழுந்து
வாய்ந்ததிரு மாமதினம்
புக்கவிரைந் தேகையில்பின்
புந்தியற்றுப் போந்தொளித்துத்
தொக்ககொலை மும்முறையும்
சூழ்ந்தியற்றப் பாய்ந்தவனைத்
தக்கபடிக் காத்தளித்த
தட்புடைமை என்னேயோ
சாதிநபி நாயகமே
தட்புடைமை என்னேயோ!

## 23

மல்லுடைய வெஞ்சமரில்
வந்தெதிர்ந்த வஞ்சகர்தம்
கல்லுடைய கைக்கவணால்
காய்ந்தெறிந்து வாய்ந்தமுகப்
பல்லுடையக் கோறல்செய்த
பான்மைகண்டும் தீமையிலாச்
சொல்லுடைய நற்கருணை
தோய்ந்துநின்ற தாய்ந்தேமே
சுத்தநபி நாயகமே
தோய்ந்துநின்ற தாய்ந்தேமே!

## 24

பொல்லாக் கொடும்போரில்
புக்கிறந்த தந்தையங்கம்
எல்லாம் அரிந்துபுனைந்
தீரலெடுத் தங்கைபற்றிப்
பல்லாற் கடித்திழுத்தப்
பாலுமிழ்ந்த பாதகிக்கும்
நல்லா தரவளித்த
நட்புடைமை கண்டேமே
நாதநபி நாயகமே
நட்புடைமை கண்டேமே!

## 25

மாண்டசவம் ஒன்றெடுத்து
வந்திடக்கண் டங்கெழும்பி
வேண்டமரி யாதைசெய
வீற்றிருந்த நண்பர்'இவர்
தீண்டரிய காபிர்'எனச்
செப்ப'அவர் உள்ளுமுயிர்
கூண்டதுண்'டென் றோதியநும்
கொள்கைநலம் மேலேயோ
கொற்றநபி நாயகமே
கொள்கைநலம் மேலேயோ!

## 26

அங்கசுத்தி முற்றும்முறை
யற்றியற்றி வெற்றியொடு
துங்கமிகும் ஓர்வீரர்
தூயதொழு கைப்புறத்துத்
தங்கஅவர் தம்குறையைத்
தாமேஓர்ந் துய்யுநெறி
பங்கமறக் காட்டுவித்த
பாரமதி தேரேமோ
பக்தநபி நாயகமே
பாரமதி தேரேமோ!

## 27

தீராப் பெரும்பகையுள்
தீமைபல செய்திளைத்தோன்
நேராய் வரப்புரந்'துன்
நீள்மனைவாய் புக்கொளித்தோர்
ஆரா யினுமவர்க்கோர்
ஆபத்து மில்லை' எனப்
பேரா யுரைத்துவந்த
பீடுநிலை தேடேமோ
பேசுநபி நாயகமே
பீடுநிலை தேடேமோ!

## 28

வாய்ந்தபெரு நாள்வரிசை
வாங்கிநல்கத் தந்தையின்றி
ஓய்ந்தழுத ஏழைமகற்
குள்ளுடைந்து நீராட்டித்
தோய்ந்தநறும் பட்டுடுத்தித்
தூக்கியிரு தோட்டுணைகொண்
டேய்ந்ததிருப் பள்ளிபுக்க
இன்னருளு மென்னேயோ
இன்பநபி நாயகமே
இன்னருளு மென்னேயோ!

## 29

'ஏதுங் கதியின்றி
இன்னலுறும் மாக்களென்றன்
மீது கடன்சாட்டி
வேண்டுவபெற் றுய்க'என
ஓதும் அருள்மொழிதந்
துற்றஉல காண்டிருந்தெப்
போதும் புகழ்படைத்த
போதநிலை ஓதேமோ
புண்யநபி நாயகமே
போதநிலை ஓதேமோ!

## 30

'செம்புவெள்ளி மண்முதலாச்
சேர்ந்தபல சாதனத்தில்
வம்புபெறச் செய்துதச்சன்
வைத்தஉரு அத்தனையும்
அம்புவியில் தெய்வமென
ஆக்கிமகிழ்ந் தேத்துநர்தாம்
வெம்புநர காழ்வ'ரென
விண்டதுவுங் கண்டேமே
வேதநபி நாயகமே
விண்டதுவுங் கண்டேமே!

## 31

பாரிபர்த்தா ஒத்தமனப்
பண்பொழிந்த போதிலவர்
கோரியத லாக்குரிமை
கொண்டுமறு மாமணத்தில்
பேரியசு தந்திரமும்
பெற்றுய்ய வைத்தமுறை
சீரியத ராதலத்துச்
செப்பவல்லார் யாரேயோ
திவ்யநபி நாயகமே
செப்பவல்லார் யாரேயோ!

## 32

பெற்றசிறு பெண்மகவைப்
பேணிவளர்த் தூர்ப்புறத்தே
உற்றகுழி தோண்டிஉயி
ரோடுபுதைத் தோகைமிகும்
அற்றமிலா வன்கணரும்
அன்பின்நிலை கண்டுணர்ச்சி
பற்றவழி காட்டுமுங்கள்
பண்புடைமை போற்றேமோ
பக்தநபி நாயகமே
பண்புடைமை போற்றேமோ!

## 33

பெண்ணினத்தை ஆடவர்தாம்
பெற்றுவக்கும் சங்கமமாய்
எண்ணிஇடர் வாரிதிக்குள்
ஈர்த்தமிழ்த்த பாவமெலாம்
மண்ணிலினி இல்லைஎன
மாற்றிஉயர் நன்மதிப்பும்
கண்ணியமும் ஈந்தவுங்கள்
காருண்யம் போற்றேமோ
காசிம்நபி நாயகமே
காருண்யம் போற்றேமோ!

## 34

உற்றபெரும் போரினிடை
ஊறுபட்டு மாண்டவர்தம்
கொற்றமிகு கைமைகளில்
கொண்டணைக்க நாதியின்றி
அற்றமிலா வெந்துயரு
ளாழ்ந்துலைந்த பல்லோரைக்
குற்றமறப் பத்தினியாக்
கொண்டமையுங் கேட்டோமே
கொண்டல்நபி நாயகமே
கொண்டமையுங் கேட்டோமே!

## 35

'ஆர்ந்தசுக துக்கமெலாம்
ஆடவர்க்கும் பெண்டிர்க்கும்
சேர்ந்தபொது' என்றுன்னிச்
செம்மையறு கைமைகளும்
ஓர்ந்துமறு மாமணஞ்செய்
துய்யும்நெறி காட்டிஅறம்
தேர்ந்தமதிப் பேறுடைமை
செப்புதற்கு மேலாதே
தெய்வநபி நாயகமே
செப்புதற்கு மேலாதே!

## 36

ஒன்றுமில்லை பெண்களுக்கிங்
குற்றகுலச் சொத்துரிமை
என்றுரைக்கும் வஞ்சநெஞ்ச
மீடழிய ஆடவரில்
நின்றுமொரு நேர்பாதி
நீத்தெடுத்து நல்கியநும்
நன்றுமிகு ஞாயநிலை
நண்ணுரு மெண்ணுரோ
நாமநபி நாயகமே
நண்ணுரு மெண்ணுரோ!

## 37

'சின்னஞ் சிறுமகவைச்
சேர்த்தணைத்த கையோடு
தன்னந் தனியாகத்
தத்தளிக்குங் கைமைகளைத்
துன்னமறு மாமணத்தில்
தோய்வித்து வாழ்வித்தல்
என்னகுறை' என்றுரைத்த
திந்நிலமு முன்றோ
ஏகநபி நாயகமே
இந்நிலமு முன்றோ

## 38

'தக்கவய தாம்வரையும்
சார்ந்தஇரு பெண்மகவை
ஒக்கவளர்த் தாவனசெய்
தோம்புமுயர் உத்தமர்தாம்
ஹக்கனருள் பெற்றுமகிழ்ந்
தாயசொர்க்க வாழ்க்கையிலெம்
பக்கமிருப் பார்'எனமுன்
பன்னியது முன்னேமோ
பாரநபி நாயகமே
பன்னியது முன்னேமோ!

## 39

ஏவலுறு தொண்டொருவற்
கேய்ந்தசொந்த மைத்துனியை
மேவமணம் செய்வித்தும்
வேறுபட்ட தோர்ந்தவரை
ஆவலொடு கொள்ளமற்றோர்
அஞ்சுவர்என் றஞ்சிஎன்றும்
பாவமற வேட்டுவந்த
பண்புடைமை தேரேமோ
பண்டைநபி நாயகமே
பண்புடைமை தேரேமோ!

## 40

'தாரமெனக் கொண்டவரைத்
தள்ளிமறு மாமனேவாய்ச்
சோரவிபச் சாரமதில்
தோய்ந்தலேந்த பாவமினித்
தீரவகை இல்லேஹறும்
செய்யகிலீர்' என்றமறைச்
சாரம்எமக் கீந்தவுங்கள்
தண்ணளியு மென்னேயோ
சாந்தநபி நாயகமே
தண்ணளியு மென்னேயோ!

## 41

ஐயைந்து பக்குவத்திற்
காயகன்னி மார்கோடி
துய்யமணம் வேட்டுமவர்
சோரவிடுத் தையெட்டுச்
செய்யவய துள்இருவர்
சேர்ந்திருவர் செல்வரென
உய்யநல்கும் ஓர்விருத்தைக்
குள்ளுவந்த துள்ளேமோ
உண்மைநபி நாயகமே
உள்ளுவந்த துள்ளேமோ!

## 42

மக்களொடு சொத்தனேத்தும்
மாநிலத்தின் ஆன்மாவோ
டொக்கவரும் நல்லழகாய்
உற்றிருப்பக் காண்பதன்றித்
தொக்ககருப் பத்தடையாம்
தொல்லேபுக்கு நெக்குருகி
மிக்கவினேக் காளாதல்
வீணென்ப தோரேமோ
மேன்மைநபி நாயகமே
வீணென்ப தோரேமோ!

## 43

'உண்டியின் றிப் பட்டினியாய்
உற்றலேவோர் மாதுயரம்
மண்டியிட்டுப் பண்டிவிம்ம
வாரிஉண்ணும் வன்கணர்தாம்
அண்டிஅறி யார்கொல்' என
ஆயதவ நோன்பு முப்பான்
எண்டிசையும் போற்றமக்கட்
கீட்டிவைத்த தோரேமோ
எங்கள்நபி நாயகமே!
ஈட்டிவைத்த தோரேமோ!

## 44

இன்மை உண்மை செல்வநிலேக்
கெய்தாமல் எல்லோரும்
நன்மைபெறும் ஓர்சமமாம்
ஞாயமிகு ஏழைவரி
வன்மையுடன் ஈந்துரிமை
வாய்ந்தபொரு ளாதாரத்
தன்மைகொளச் செய்தவுங்கள்
தத்துவமும் நத்தேமோ
சாந்திநபி நாயகமே
தத்துவமும் நத்தேமோ!

## 45

'உள்ளுணர்வு போக்கிஅந்தோ
உன்மத்த நாய்போலும்
வள்ளுணர்வு தேக்கிஉயிர்
வாதையொடு போதைதரும்
கள்ளுணர்வு கொள்ளகிலீர்
கத்தனுரை ஈ'தென்னத்
தெள்ளுணர்வு தந்துவந்த
செம்மைநிலே ஏதேயோ
திட்பநபி நாயகமே
செம்மைநிலே ஏதேயோ!

## 46

"கொடுத்தமுதற் கெட்டுணையுங்
கூடவட்டி வாங்கலுண்ணல்
கடுத்தஹறும் ஆகும்அது
காண்மின்" எனப் பூணும்நெறி
தொடுத்தமறை சொற்றமொழி
சூழ்ந்துரைத்துத் தூய்மைபட
அடுத்துவந்து காத்தவுங்கள்
அன்புடைமை வம்பேயோ
ஆலநபி நாயகமே
அன்புடைமை வம்பேயோ!

## 47

முடியாட்சி என்றுமுழு
மோசநிலைக் காளாக்கும்
தடியாட்சி நீத்தொறுத்து
சர்வசன நாயகமாம்
குடியாட்சிக் கேற்றவழி
கோலிமுதன் மாதிரியாப்
படியாட்சி செய்தவுங்கள்
பாரமதி என்னேயோ
பான்மைநபி நாயகமே
பாரமதி என்னேயோ!

## 48

அத்தனருள் வேதமொழிக்
கத்தாட்சி உம்மையல்லால்
சித்தமுறத் தேர்வதற்கும்
செப்புதற்கும் இல்லையென
இத்தரையில் ஒத்தமொழி
ஈந்தெவரும் ஏத்தெடுப்பச்
சுத்தமுறு நும்மாட்சி
சொல்லுதற்கு மேலாதே
சோமநபி நாயகமே
சொல்லுதற்கு மேலாதே!

## 49

'அன்னை அப்பன் இல்லை நபி
ஆதம் ஹவ்வா அன்றி மக்கட்
கென்னை இனிப் பேதநிலை
இவ்வுலகில்' என்றுறுத்துச்
சன்னை பெறு தீங்ககற்றிச்
சார்ந்த நல்ல சோதரராத்
தன்னையறிந் துய்யுநெறி
தந்ததுவும் பேணேமோ
தாசிம் நபி நாயகமே
தந்ததுவும் பேணேமோ!

## 50

முன்னபியும் பின்னபியும்
மூவுலகும் ஏத்தெடுக்கும்
நன்னபியும் இஸ்லாத்தின்
நாயகரும் தாயகரும்
பன்னபியும் உள்நெகிழ்ந்து
பக்திமிகப் போற்றிசெயும்
மன்னபியும் ஆன உங்கள்
மாண்பென்ன மாண்பேயோ
வாசநபி நாயகமே
மாண்பென்ன மாண்பேயோ!

## 51

பாலர்முதல் யாவரும்நும்
பாலணுகில் யார்க்குமுனம்
ஓலமுறத் துய்யசலாம்
ஓதிமுக மன்கூறிச்
சாலஉப சாரவகை
தந்துவக்கும் நல்லொழுக்கச்
சீலமற வாதாண்ட
செம்மைநலம் வாழ்த்தேமோ
தெய்வநபி நாயகமே
செம்மைநலம் வாழ்த்தேமோ!

## 52

'ஆரும்அறி யாதொருவற்
காணேஅளித் தா லும்அது
தேருமிறை' என்றுன்னிச்
சிந்தைமகிழ்ந் 'தெப்படியும்
நேருமுறை செய்கமிக
நீட்டற்க' என்றமறை
ஒருமிதத் தோடளித்த
உண்மைநிலே என்னேயோ
ஒண்மைநபி நாயகமே
உண்மைநிலே என்னேயோ!

## 53

வாய்ந்தஇன்பப் பேறருத்தும்
வாழ்க்கைநல மத்தனேயும்
ஆய்ந்தமைந்த இல்லறத்துக்
காருயிரா யாவதன்றி
ஒய்ந்ததுற விற்காசை
உற்றெழுந்து போந்துபெறற்
கேய்ந்தபயன் யாதுகொல்என்
றேசியது மாசேயோ
ஏந்தல்நபி நாயகமே
ஏசியது மாசேயோ!

## 54

மக்கநகர் நீத்தவர்நும்
வாய்ந்ததுணே யோரெனவந்
தொக்கநல்கும் மாமதினத்
தோரில்ஒரு வோர் 'எமது
தக்கமனே ரண்டிலொன்றைத்
தந்திடுவல்' என்றுரைக்க
'மிக்கமொழி' என்றெறுத்த
மேன்மைமுறை விள்ளேமோ!
வேதநபி நாயகமே
மேன்மைமுறை விள்ளேமோ!

## 55

சென்றவழி நாப்பண்உமைச்
சேரவிடுத் தேவருவல்
என்றகன்ற நண்பர்நினை
வின்றிஅவண் மற்றையநாள்
ஒன்றவந்து நோக்கிநிற்றல்
ஓர்ந்துரைபோ துட்டுணுக்கிக்
கன்ற 'அஞ்சல்' என்றுண்ட
கண்ணியமு மெண்ணேமோ
கத்தநபி நாயகமே
கண்ணியமு மெண்ணேமோ!

## 56

மக்களிடை தாழ்வுயர்வு
வன்மைமென்மை தீண்டாமை
மிக்ககுல பேதமுதல்
வேற்றுமையெ லாமொறுத்துத்
தக்கசம தத்துவமாம்
தண்ணிழற்கீழ் ஆக்கியென்றும்
தொக்கஅருள் கூர்ந்துவந்த
துய்யநிலை பொய்யேயோ
சோதிநபி நாயகமே
துய்யநிலை பொய்யேயோ!

## 57

'வாய்மையல தில்லைஉயிர்
வாழ்க்கைநலம் அத்தனையும்
தூய்மையுடன் நல்கவல்ல
தோமிறவம்'¶ என்றெவர்க்கும்
ஆய்மையுடன் ஓதிஅதற்
கத்தாட்சி யாப்போந்து
சேய்மைதரு மூவுலகும்
சீர்த்துநின்ற தேத்தேமோ
தெய்வநபி நாயகமே
சீர்த்துநின்ற தேத்தேமோ!

---

¶ தோமில் தவம் தோம்—குற்றம்

## 58

குற்றமுறச் செய்தஉலூ
கூடாதென் றோர்ந்துஅவரை
முற்றஅழைத் தோர்தனியாய்
முன்னிருத்திச் 'செய்வல்யான்
தெற்றுளதேல் ஓரும்'எனச்
செப்பியது செய்துணர்ச்சி
பற்றவைத்துக் காத்தவுங்கள்
பண்புடைமை யாதேயோ
பரமநபி நாயகமே
பண்புடைமை யாதேயோ!

## 59

மக்கநகர் வாழ்வொறுத்து
மாமதின வாசமுன்னி
மிக்கவிரைந் தேகுமந்த
வேளையிலும் பின்தொடர்ந்து
தக்கவடி வாளுருவித்
தாக்கமுனைந் தோரிருகால்
புக்கவனுக் குங்கடைக்கண்
பூத்துநின்ற துள்ளேமோ
புனிதநபி நாயகமே
பூத்துநின்ற துள்ளேமோ!

## 60

கண்டவுடன் பல்லிளித்துக்
கைவிரித்துக் கண்சிமிட்டிக்
கொண்டபரி காசமுறை
கூர்ந்தியற்றும் கோளினர்க்கும்
மண்டலத்தி லச்செயலே
மாற்றமற எப்பொழுதும்
அண்டஅறிந் துட்கசிந்த
அற்புதமும் நட்பேயோ
அண்ணல்நபி நாயகமே
அற்புதமும் நட்பேயோ!

## 61

கொல்லவெனத் தேடிஒன்னார்
கூண்டகுகை வாயிலிடை
மெல்லவந்து நூற்சிலந்தி
விட்டவலை யோடுபுறு
நல்லஅடை காத்திருப்ப
நன்குணர்ந்'திங் கில்லை'யெனச்
செல்லஅவண் வீற்றவுங்கள்
தெய்வீகம் போற்றேமோ
தேவநபி நாயகமே
தெய்வீகம் போற்றேமோ!

## 62

வாதமிடும் பூதர்குழாம்
'வல்லவனைத் தாழுமந்தப்
போதடுத்த' தென்றுரைக்கப்
'போமின்எங்கள் பள்ளியினுள்
பேதமில்லை நின்றுதொழும்
பேசுவம்பின்' என்றியம்பி
ஏதமறக் காத்தவுங்கள்
இன்னருளும் பன்னேமோ
ஈடில்நபி நாயகமே
இன்னருளும் பன்னேமோ!

## 63

யோகமன்று ஞானமன்று
மூகமன்று மோனமன்று
தேகமன்று நாமமன்று
சித்தமன்று சத்தமன்று
போகமன்று சுத்தபரி
பூரணத்திற் பூரணமா
ஆகநின்ற ஏகமென்ற
அத்தநிலை நத்தேமோ
ஆகிர்நபி நாயகமே
அத்தநிலை நத்தேமோ!

## 64

வானுமில்லை நீருமில்லை
வாயுமில்லை தேயுமில்லை
நானுமில்லை நீயுமில்லை
நாளுமில்லை கோளுமில்லை
பானுமில்லை மீனுமில்லை
பாரமதி யோடுவெளி
தானுமில்லை ஏகமென்ற
தத்துவத்தை நத்தேமோ
  தருமநபி நாயகமே
  தத்துவத்தை நத்தேமோ!

## 65

விண்ணுமில்லை மண்ணுமில்லை
மேலுமில்லை கீழுமில்லை
பெண்ணுமில்லை ஆணுமில்லை
பேடுமில்லை ஊடுமில்லை
தண்ணுமில்லை சூடுமில்லை
சார்ந்தகர ணாதிகளின்
கண்ணுமில்லை ஏகமென்ற
கத்தநிலை நத்தேமோ
  கருணைநபி நாயகமே
  கத்தநிலை நத்தேமோ!

## 66

வாழுமுங்கள் மாமனைவாய்
வல்லிருளில் 'காக்க'வெனச்
சூழுமவர்க் காதிவஹீ
சொற்றபடிக் காப்பளிங்குத்
தாழுமெதிர் இல்லைஇனி
தக்கசுக வாரிதிக்குள்
ஆழு'மெனப் போகவிட்ட
அற்புதமும் பொற்பேயோ
  ஹாஷிம்நபி நாயகமே
  அற்புதமும் பொற்பேயோ!

## 67

'போதுவிழு முன்கொன்று
போதுவல்யான்' என்றெழுந்து
மோதவந்த அன்னவர்க்கும்
முத்திநிலை தேற்றியருள்
மேதகையா நல்லமைச்சு
மேவஅளித் தெண்டிசையும்
பேதமற மார்க்கமுறை
பேசவிட்ட துள்ளேமோ
பிரியநபி நாயகமே
பேசவிட்ட துள்ளேமோ!

## 68

மக்கத்தார் சொற்றபடி
வந்துமதி காலைஒக்கல்
ஒக்கத்தான் கைத்துணியில்
ஓங்கும்அஜ்ருல் அஸ்வத்தைச்
சிக்கத்தான் வைத்துயர்த்திச்
சேருமிடம் தேர்ந்தமைத்துப்
பக்கத்தார் போற்றநின்ற
பாரமதி ஓரேமோ
பக்திநபி நாயகமே
பாரமதி ஓரேமோ!

## 69

தூர்ந்தமலைப் பொந்திலுமைச்
சுற்றமொடு தள்ளிவஞ்சர்
ஆர்ந்தஉண்டி நல்காமல்
அல்லல்நல்கி வெல்லவென
நேர்ந்தமனக் கோட்டைமுற்றும்
நீறுபட மூவாண்டு
சேர்ந்திருந்து மீண்டவுங்கள்
திண்மைநல மென்னேயோ
செல்வநபி நாயகமே
திண்மைநல மென்னேயோ!

## 70

வைதவன்பால் தீர்ந்தனன்யான்
வஞ்சமென மண்டைஉடைத்
தெய்ததந்தைக் கின்னலிதில்
இல்லையின்பம் என்றுறுத்துப்
பொய்தலிலாச் சன்மார்க்கம்
பூணவழி காட்டிஅருள்
செய்தவுங்கள் மாராயம்
செப்பவல்லார் யாரேயோ
செம்மல்நபி நாயகமே
செப்பவல்லார் யாரேயோ!

## 71

மக்கம்விட்டு நள்ளிருளில்
வாய்ந்தபைத் துல்முகத்திஸ்க்(கு)
ஒக்கநடத் தாட்டியஅவ்
வுத்தமன்றன் உண்மையெலாம்
தொக்கஅறி விக்கவகை
சூழ்ந்துணர்ந்து மீண்டெழுந்து
புக்கவுங்கள் மாமகிமை
பூதலமும் ஓதாதோ
போதநபி நாயகமே
பூதலமும் ஓதாதோ!

## 72

வெட்டமுனைந் தோன்தரையில்
மீண்டுமிட வாளைஅவற்
கிட்டமுடன் நல்கி'இனி
ஏற்றஇஸ்லாம் பாரஸிக
வட்டமுற்று மேவுமுதல்
மன்னவனைப் போந்தங்கே
பட்டமுற்று வாழ்தி' எனப்
பன்னியது முன்னேமோ
பாரநபி நாயகமே
பன்னியது முன்னமோ!

## 73

புங்கமழை தூவியும்மைப்
போந்தடர்ந்த புல்லர்சமர்க்
கங்கஅரண் கட்டிஇகன்
ஞூர்ப்பரித்த அன்பர்குழாம்
பங்கமறக் கண்டவெற்றி
பார்த்துமசை வின்றிஅருள்
பொங்கவினை மங்கநின்ற
பூராயம் ஓரேமோ
   புனிதநபி நாயகமே
   பூராயம் ஓரேமோ!

## 74

வஞ்சத்தால் கொல்லவென
வந்தஒரு பாதகிதான்
நஞ்சத்தால் செய்தஉண்டி
நல்கஉண்ட நற்றோழர்
துஞ்சத்தான் சூழ்துயரில்
தோய்ந்தமிழ்ந்தும் அன்னவளை
விஞ்சத்தான் காத்தளித்த
மெய்யன்பு பொய்யேயோ
   விந்தைநபி நாயகமே
   மெய்யன்பு பொய்யேயோ!

## 75

வாய்ந்தஒட்டை மீதுவர
மாமதினத் தோரெவரும்
பாய்ந்தெதிர்ந்து 'வம்மினெங்கள்
பாரமனை நும்ம' தென
'ஆய்ந்தறிந்து நிற்குமிந்த
அன்புருவத் தொட்டையதை
ஏய்ந்தஇட மாக்கொள்வ(து)'
என்றஉரை நன்றேயோ
   ஏகன்நபி நாயகமே
   என்றஉரை நன்றேயோ?

## 76

சட்டத்தாற் செய்தபல
தண்டனைகள் சந்தர்ப்பக்
கட்டத்தால் அன்றிமற்ற
காலமெல்லாம் மன்னிப்பும்
இட்டத்தால் செய்துவக்கு
மின்னருளும் மேலெனமுத்
திட்டத்தால் ஆட்சிமுறை
சீர்க்கவைத்த தேற்கேமோ
செல்வநபி நாயகமே
சீர்க்கவைத்த தேற்கேமோ!

## 77

'பெண்டுபிள்ளை சுற்றமொடு
பேசுபொரு ளத்தனையும்
கொண்டுவறி யோர்க்குதவிக்
கூண்டவிருந் தோம்பியின்சொல்
விண்டுமகிழ் வாழ்வலது
வெய்யசன்னி யாசநெறி
கண்டுவத்தல் தீய'தெனக்
காட்டியதும் வேட்டேமோ
கருணைநபி நாயகமே
காட்டியதும் வேட்டேமோ!

## 78

'பொய்யென்று நீஉரைத்த
போதனைகள் யாவும்உருட்(டு)
உய்யஅதில் ஒன்றுமில்லை
ஓர்க' என ஓதும்அவற்(கு)
'ஐய, தெய்வம் ஒன்றவன்றன்
ஆதிநபி யான்உணரிற்
செய்யசொர்க்கம் எய்வை' என
செப்புமுண்மை தப்பேயோ
செல்வநபி நாயகமே
செப்புமுண்மை தப்பேயோ!

## 79

'ஒன்னலரோ பற்பலர்நாம்
ஓரிருவர் உற்றடர்ந்தால்
என்னசெய்வ' தென்றழுங்க
'இல்லையில்லை யாம்மூவர்
பன்னரிய ஈசனும்நம்
பக்கமுளன் அஞ்சலிர்' என்
றுன்னரிய வாய்மைசொற்ற
ஊக்கநிலை நோக்கேமோ
ஓகைநபி நாயகமே
ஊக்கநிலை நோக்கேமோ!

## 80

'குற்றமற வேலைசெய்த
கூலிகளி னங்கமிசை
உற்றவிய ராறுமுனம்
உள்ளபடி உள்ளதொகை
சொற்றபடி எட்டுணையும்
சோர்வுவரா தீந்துதவல்
நற்றவ'மென் றோதுமுங்கள்
ஞாயமுறை ஆயேமோ
ஞாலநபி நாயகமே
ஞாயமுறை ஆயேமோ!

## 81

பிச்சைகொள வந்தவர்தம்
பீழைநிலைக் குள்ளுருகி
இச்சைமலிந் தேய்ந்தசில
ஈன்'றிதற்கோர் கோடரிகொண்
டச்சமற நித்யவிர்த்திக்
காவனசெய் துய்யு'மெனப்
பச்சமுறச் சொற்றவுங்கள்
பவ்வியமும் நவ்வேமோ
பழமைநபி நாயகமே
பவ்வியமும் நவ்வேமோ!

## 85

தோழர்அபூ பக்கருமைத்
'தூயஇசு லாம்தழுவி
வாழநினைந் தோர்புதுமை
மென்றருள வேண்டு'மெனச்
'சூழவந்த வல்லிருளில்
தோய்ந்தறிந்த நும்கனவின்
ஆழமறிந் துய்யு'மென்ற
அற்புதமும் கற்பேயோ
அரியநபி நாயகமே
அற்புதமும் கற்பேயோ!

## 86

உற்றமகள் இட்டநகைக்
குள்ளுடைந்து வாடி' இது
குற்றம்நபி மாமகளின்
கொள்கையல தாயினும்கை
அற்றவருக் கீந்துதவல்
அன்பின்நிலை' என்றஉணர்
பற்றவைத்துக் காத்ததிந்தப்
பாருலகுந் தேராதோ
பகரும்நபி நாயகமே
பாருலகுந் தேராதோ!

## 87

கோதுமைஓர் கால்படிக்கே
குப்பாய மொன்றீடாப்
போதநல்கி நாட்கழித்த
போதுமந்தப் பொய்ப்பொருளின்
மீதுநசை வையாமல்
மேலவன்தன் மெய்யருட்கே
மோதுநசை வைத்ததிந்த
மூவுலகுங் காவாதோ
முன்னைநபி நாயகமே
மூவுலகுங் காவாதோ!

## 88

'கூறுவலக் கையன்றிக்
கொள்ளலிடக் கையால்லூண்
தேறுவை' என் றோதஅக்கை
தீரவுத வாதெனப்போய்
சீறவுரைத் தேளனம்செய்
தீமையனு மத்தீமை
மாறவகை யற்றொழிந்த
மாயநிலை ஆயேமோ
மதினநபி நாயகமே
மாயநிலை ஆயேமோ!

## 89

'தந்தைக்குமாற் றுந்தாயைத்
தன்மனையாக் கொண்டுவத்தல்
நிந்தையல நீர்மை' என
நேர்ந்திழைத்த பாவமெலாம்
நந்தவகை யற்றுலைந்த
நண்ணலரும் எண்ணும்நெறி
தந்துதவிக் காத்தவுங்கள்
தட்புடைமை செப்பேமோ
தாமிம்நபி நாயகமே
தட்புடைமை செப்பேமோ!

## 90

தீவமிட எண்ணெயின்றிச்
சேர்ந்தஅய லாரகத்தின்
மேவுகடன் கொண்டுவந்த
வேளையிலும் வெய்யகலி
ஓவவகை தேடாமல்
உற்றமனை யேதேடி
ஆவல்மிக நின்றவுங்கள்
ஆர்வநிலை ஓரேமோ
ஹக்கன்நபி நாயகமே
ஆர்வநிலை ஓரேமோ!

## 91

நிந்தையின்றி வேறொன்றும்
நேர்ந்துரையாப் பாவியும்பின்
சிந்தைகனிந்(து) உம்அடிக்கே
செய்யபுகழ் பாடிவரச்
சந்தமிக்க மெய்யிலிட்ட
தக்கபரி வட்டமொன்றை
முந்தஅளித் தாண்டதிந்த
முச்சகமு மெச்சாவோ
முத்துநபி நாயகமே
முச்சகமு மெச்சாவோ!

## 92

தீயனபூ ஜாகில்தந்த
செல்வன்இக்ரி மாஉம்மை
நேயமொடு காணஎண்ணி
நேர்ந்தடைந்த போதவனை
ஏயஅழைத் தங்கமர்த்தி
ஏற்றமுக மன்கூறி
தூயசெழும் போர்வைதந்த
சூழ்நிலையும் பேணேமோ
சோமநபி நாயகமே
சூழ்நிலையும் பேணேமோ!

## 93

'மன்னன்ஒலீ தீன்றெடுத்த
மாமகவை நும்மகற்காப்
பின்னமற ஈவம்இனிப்
பேர்த்தளித்துக் காமின்' எனச்
சொன்னஉரைக் குட்டுணுக்கிச்
சூரஅழல் கக்குதந்தைக்
கின்னமுத மானவுங்கள்
ஏற்றநிலை சாற்றேமோ
ஏதில்நபி நாயகமே
ஏற்றநிலை சாற்றேமோ!

## 91

நிந்தையின்றி வேறொன்றும்
நேர்ந்துரையாப் பாவியும்பின்
சிந்தைகனிந்(து) உம்அடிக்கே
செய்யபுகழ் பாடிவரச்
சந்தமிக்க மெய்யிலிட்ட
தக்கபரி வட்டமொன்றை
முந்தஅளித் தாண்டதிந்த
முச்சகமு மெச்சாவோ
முத்துநபி நாயகமே
முச்சகமு மெச்சாவோ!

## 92

தீயனபூ ஜாகில்தந்த
செல்வன்இக்ரி மாஉம்மை
நேயமொடு காணஎண்ணி
நேர்ந்தடைந்த போதவனை
ஏயஅழைத் தங்கமர்த்தி
ஏற்றமுக மன்கூறி
தூயசெழும் போர்வைதந்த
சூழ்நிலையும் பேணேமோ
சோமநபி நாயகமே
சூழ்நிலையும் பேணேமோ!

## 93

'மன்னன்ஒலீ தீன்றெடுத்த
மாமகவை நும்மகற்காப்
பின்னமற ஈவம்இனிப்
பேர்த்தளித்துக் காமின்' எனச்
சொன்னஉரைக் குட்டுணுக்கிச்
சூரஅழல் கக்குதந்தைக்
கின்னமுத மானவுங்கள்
ஏற்றநிலை சாற்றேமோ
ஏதில்நபி நாயகமே
ஏற்றநிலை சாற்றேமோ!

## 94

"மக்ககந ரார்செய்த
வல்வினைகள் யாதெனினும்
ஒச்கமறந்தேன் சகித்தேன்
ஒன்றுமில்லை துன்பம்இனி
மிக்கமறு வோடுசுகம்
மேவவுயிர் வாழ' எனத்
தக்கவுரை தந்துநின்ற
சாதுரிய மோரேமோ
சாதுநபி நாயகமே
சாதுரிய மோரேமோ!

## 95

பாதகன்அ பூசுபியான்
பல்கோடி தீவினைகள்
போதவிடைத் தார்ப்பரித்து
போதும்'அவன் இல்லகத்தே
மோதவந்தோர் யாவரையும்
மோசமறக் காமின்'எனச்
சீதஉரை தந்தவுங்கள்
செப்பமுறை ஒப்பேமோ
செய்குநபி நாயகமே
செப்பமுறை ஒப்பேமோ!

## 96

'கேடுவரும் தொல்லைமிகும்
கேண்மையறும் பண்பொழியும்
பாடுவரும் கைப்பொருளும்
பாழாகும் பல்குமனச்
சூடுவரும் கொள்ளற்க
சூதாட்டம்' என்றமறைப்
பீடுவரும் வாய்மைசொற்ற
பின்னேயு முன்னேமோ
பெட்புநபி நாயகமே
பின்னேயும் முன்னேமோ!

## 97

'பித்தமுறு வஞ்சனெனப்
பேரிட்டிப் பேயனையும்
இத்தரையோர் தூற்றவிடில்
இல்லைஇனித் தொல்லைஎன்றும்
சுத்தமொடு வாழ்ந்திடலாம்
சொல்லுக'என் றூர்ப்பரித்(து)ஊர்
ஒத்தடர்ந்தும் சற்றுமஞ்சா
உச்சநிலை மெச்சேமோ
உம்பர்நபி நாயகமே
உச்சநிலை மெச்சேமோ!

## 98

மோசமிகு வன்காபிர்
மொய்த்தடர்ந்த வல்வினையால்
பாசமிகும் இஸ்லாத்தின்
பாதையில்மு தன்முதலாய்
யாசிறுதம் மாமனையார்
இன்னுயிர்நீத் தேக'அவர்க்
காசைமிகு சொர்க்க'மென்ற
ஆர்வநிலை தேரேமோ
ஆலநபி நாயகமே
ஆர்வநிலை தேரேமோ!

## 99

காவல் சிறையிலுமைக்
கண்கலங்க வைக்கஎனும்
ஏவல் கொடுவந்தோர்க்
'கிப்பொழுதே நும்இறைவன்
பாவம் இறந்தனன்போய்ப்
பாரு'மெனப் பார்த்தவர்தாம்
ஆவ லொடுமிஸ்லாத்
தாயசெயல் ஆயேமோ
அண்டர்நபி நாயகமே
ஆயசெயல் ஆயேமோ!

## 100

ஆண்டும் ஒருமூன்று
அல்ல லுறும் நும்கிளைஞர்
வேண்டும் எனஎண்ணி
வேருய் ஒதுக்கிவைத்துத்
தீண்டு பொருள்தடுத்த
தீமையரும் நல்லுணர்ச்சி
பூண்டு மகிழ்சிறப்ப
போதித்த துள்ளேமோ
புவனநபி நாயகமே
போதித்த துள்ளேமோ!

## 101

ஒன்றன்பின் ஒன்ருக
ஓரேழ்ஆட் டுப்பாலை
வென்றியுடன் வாங்கியுண்டு
வீட்டிலுள்ளார் யாவரையும்
துன்றுபசிக்(கு) ஓரைவைத்த
துட்டனுக்கு மின்னருட்சீர்
நன்றியுடன் ஈந்தளித்த
ஞாயநிலை வேயேமோ
ஞானநபி நாயகமே
ஞாயநிலை வேயேமோ!

## 102

நோவுற்ற வன்பிணிக்கே
நொந்துழல்வோர் யாரெனினும்
மேவுற்ற தொண்டியற்றி
மீட்சிபெற மேலவன்பால்
நாவுற்ற இன்னுரையால்
நல்லதுஆக் கேட்டிரக்கும்
சோவுற்ற நும்கருணை
சொல்லவல்லார் யாரேயோ
சுத்தநபி நாயகமே
சொல்லவல்லார் யாரேயோ!

## பாவலரைப் பற்றி ....

| | |
|---|---|
| பிறந்த நாள் | 31—8—1874 |
| தந்தையார் | பக்கீர்மீரான் |
| ஊர் | கோட்டாறு, குமரி மாவட்டம் |
| ஆசிரியர் | சங்கரநாராயண அண்ணாவியார் |
| நடத்திய இதழ்கள் | யதார்த்தவாதி, இசுலாமிய மித்திரன் (1898) |
| சோடசாவதானம் | 1906, கோட்டாறு ஜும்மா மஸ்ஜித் |
| சதாவதானம் | 1907, மார்ச் 10, சென்னை விக்டோரியா ஹால் |
| திருமணம் | 1907 |
| முதல் மாணாக்கர் | தெங்கம்புதூர் தா. சாத்தாங் குட்டிப் பிள்ளை |
| மக்கள் | ஆண்மக்கள் நால்வர், பெண் ஒருவர். |
| மறைவு | 19—2—1950. |
| நூல்கள் | |

*அச்சேறியவை*

உரை நடை

- தேவலோகப் பழிக் குற்ற வழக்கு
- வேதாந்த விவகாரப் பழிக்குற்ற வழக்கு
- சீறு நாடகம்
- சீறுப்புராணவுரை

செய்யுள்

- கோட்டாற்றுப் பிள்ளைத்தமிழ்
- கோட்டாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி
- கல்வத்து நாயக இன்னிசைப் பாமாலை
- சம்சுத்தாசீன் கோவை
- நபிகள்நாயக மான்மிய மஞ்சரி

*அச்சேறாதவை*

- உத்தமபாளையம் முகமது இசுமாயில் கோவை
- சசிவோத்தமக் கோவை
- அழகப்பக் கோவை
- நீதி வெண்பா
- தனிப்பாடல்கள்

| பெற்ற பட்டங்கள் | வழங்கியோர் |
|---|---|
| சதாவதானி<br>மகாமதி | மகாவித்துவான் கண்ணப்ப முதலியார்<br>தலைமை யேற்ற சதாவதான அரங்கச் சான்றோர் |
| தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம் | காஞ்சிபுரச் சான்றோர்.<br>(அருட்பா மருட்பா அன்று அருட்பாவே என்று வாதிட்டு வென்றபோது, காஞ்சி வரதராசப் பெருமாள் கோவில் பூரண கும்ப மரியாதையோடு பெற்றது.) |
| கலைக்கடல் | தொண்டிச் சான்றோர். |
| அல்லாமா (டாக்டர்) | திண்டுக்கல் சான்றோர். |
| தமிழ்ப் பெரும்புலவர் | நாஞ்சில் நாட்டார். |

# பாடல் முதற்குறிப்பு

## அகரவரிசை



| பாடல் | பக்கம் | பாடல் | பக்கம் |
|---|---|---|---|
| அங்கசுத்தி | 10 | காட்டுமர | 8 |
| அத்தனருள் | 17 | காவல்சிறையில் | 34 |
| அழுகுமல | 5 | குற்றமற | 28 |
| அன்னையப்பன் | 18 | குற்றமனத்தொருத்தி | 8 |
| ஆண்டும் | 35 | குற்றமுற | 21 |
| ஆதிஒருவன் | 2 | கூறுவலக்கை | 31 |
| ஆருமறியாது | 19 | கேடுவரும் | 33 |
| ஆர்ந்தசுக | 13 | கொடுத்தமுதற் | 17 |
| இன்மைஉண்மை | 16 | கொண்டபெரு | 8 |
| உண்டியின்றி | 16 | கொல்லவென | 22 |
| உண்ணஉணவு | 7 | கோதுமை | 30 |
| உள்ளுணர்வு | 16 | சட்டத்தால் | 27 |
| உற்றபெரும் போரினிடை | 13 | சித்தமுற | 6 |
| உற்றபெரும் நண்பரிடை | 6 | சின்னஞ் | 14 |
| உற்றமகள் | 30 | சுத்தபர | 2 |
| எங்கள்நபி | 29 | செங்கதிரும் | 3 |
| ஏதுங்கதியின்றி | 11 | செம்புவெள்ளி | 11 |
| ஏவலுறு | 14 | செல்லும் | 4 |
| ஐயைந்து | 15 | சென்றவழி | 20 |
| ஒன்றன்பின் | 35 | தக்கவய | 14 |
| ஒன்றுதெய்வம் | 2 | தந்தைக்குமாற் | 31 |
| ஒன்றுமில்லை | 13 | தாரமென | 15 |
| ஒன்னலரோ | 28 | தீயனபூ | 32 |
| கண்டவுடன் | 21 | தீரா | 10 |
| கல்லால் | 5 | தீவமிட | 31 |

| பாடல் | பக்கம் | பாடல் | பக்கம் |
|---|---|---|---|
| தூர்ந்தமலை | 24 | மண்ணுண்ட | 4 |
| தோழரபூ | 30 | மல்லுடைய | 9 |
| நிந்தையின்றி | 32 | மன்னன்ஒலி | 32 |
| நீசனபூ | 4 | மாண்டசவம் | 10 |
| நோவுற்ற | 35 | மாண்டசிறு | 29 |
| பள்ளியிடை | 3 | மிக்கபொருள் | 7 |
| பாதகன் | 33 | முடியாட்சி | 17 |
| பாரிபர்த்தா | 12 | முன்னபியும் | 18 |
| பாலர்முதல் | 18 | மோசமிகு | 34 |
| பிச்சைகொள | 28 | யோகமன்று | 22 |
| பித்தமுறு | 34 | வஞ்சத்தால் | 26 |
| புங்கமழை | 26 | வஞ்சமற்ற | 6 |
| பெண்டுபிள்ளை | 27 | வாதமிடும் | 22 |
| பெண்ணினத்தை | 12 | வாய்ந்தஇன்ப | 19 |
| பெற்றசிறு | 12 | வாய்ந்தஒட்டை | 26 |
| பொய்யென்று | 27 | வாய்ந்த சிவி | 7 |
| பொல்லா | 9 | வாய்ந்ததிரு | 5 |
| போதுவிழு | 24 | வாய்ந்தபெரு | 11 |
| மக்கத்தார் | 24 | வாய்ந்தமனை | 3 |
| மக்கநகர் நீத்தவர் | 19 | வாய்மையல | 20 |
| மக்கநகரார்செய்த | 33 | வாழுமுங்கள் | 23 |
| மக்கநகர் வாழ்வொறுத்து | 21 | வானுமில்லை | 23 |
| மக்கநகர் விட்டெழுந்து | 9 | விண்ணுமில்லை | 23 |
| மக்கம்விட்டு | 25 | வெட்ட | 25 |
| மக்களிடை | 20 | வெல்ல | 29 |
| மக்களொடு | 15 | வைதவன்பால் | 25 |

## அரபு

## அருஞ்சொல் விளக்கம்

| பாடல் எண் | சொல் | விளக்கம் |
|---|---|---|
| 3 | ஹஜ்ஜு | இஸ்லாமிய ஐம்பெருங் கடமைகளுள் ஒன்று. மக்கமாநகர்ப் புனிதப்பயணம். |
| 8 | அபூஜஹில் | இறுதிவரை இஸ்லாத்தை ஒப்புக் கொள்ளாதவன். நாயகத்திற்கு இடர்ப்பாடுகள் பலசெய்த பகைவர்கள் தலைவன். |
| 11 | துஆ | இறையருள் இரத்தல். |
| 12 | கஃபா | மக்கமா நகரிலுள்ள ஆதி இறையில்லம். |
| 25 | காபிர் | ஏகத்துவ மறுப்பாளன். |
| 31 | தலாக் | மணவிலக்கு. |
| 38 | ஹக்கன் | இறைவனின் அழகிய திருநாமங்களுள் ஒன்று. (உண்மையாளன்.) |
| 40 | ஹறும் | இறைவனால் விலக்கப்பட்டது. |
| 58 | உளூ | அங்க சுத்தி. |
| 66 | வஹீ | இறையறிவிப்பு. |
| 68 | அஜ்ருல் அஸ்வத் | கஃபாவில் பதிக்கப்பட்டுள்ள கருப்புக்கல். நபிகளால் முத்தமிடப்பட்டுச் சிறப்பிக்கப் பட்டது. |
| 71 | பைத்துல் முகத்திஸ் | ஜெருசலத்தில் உள்ள இறையில்லம். |
| 95 | அபூசுபியான் | முதலில் மிகப்பெரிய எதிரியாயிருந்து பிறகு இஸ்லாத்தைத் தழுவியவர். நாயகத்துணைவியருள் ஒருவரான உம்முஹபீபா நாச்சியாரின் தந்தையார். |
| 98 | யாசிர் | நாயகத் தோழருள் ஒருவர். |

AKARAM